127

127 449

SEKKILAR
GRAMMAR & COMPOSITION

BOOK I for STANDARD III

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR
MADRAS

Vidwan M. RAJAMANIKKAM, B.O.L.
Tamil Pandit, Muthialpet High School, Madras.

THE MODEL PUBLICATIONS
THEAGARAYANAGAR :: MADRAS.

சேக்கிழார்

இலக்கணமும் கட்டுரையும்

முதற் புத்தகம்

(மூன்றும் வகுப்பிற்கு உரியது)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 1943
MADRAS

ஆக்கியோர் :

வித்வான் மா. இராசமாணிக்கம், B. O. L.,

தமிழ் ஆசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

494.8115

மாடல் பப்ளிகேஷன்ஸ்

தியாகராயநகர் :: சென்னை.

பதிப்புரிமை] 1942 [விலை அணா 4

1st Edition November 1942.

P31, J:2

Printed at The Senguntha Mithran Press, G. T. Madras.

814

முன்னுரை

சேக்கிழார் இலக்கணமும் கட்டுரையும் என்னும் பெயர் கொண்ட இச்சிறு நூல், மூன்றும் வகுப்புப் பிள்ளைகட்காக எழுதப்பட்டுள்ளது. இஃது, கல்வித் துறையினர் 1939-ல் வெளியிட்ட பாட இயலின் (Syllabus) படி அமைந்ததாகும்.

1. இலக்கணம்—(1) பெயர்ச்சொற்களையும் வினைச் சொற்களையும் கண்டறிதல், (2) அவற்றுள் ஒருமை-பன்மைகளைக் கண்டறிதல், (3) முற்றுப் புள்ளியின் பயனை அறிதல்; (4) தமிழ் எழுத்துகளை முறைப்படி அறிதல்-என்பனவே பாட இயலில் குறிக்கப்பட்டவை. இந்நான்கும் போதிய விளக்கத்துடனும் பயிற்சிகளுடனும் இங்கு இடம் பெற்றுள்ளன.

நிகழ்ச்சிகளைக் கூறுதல் (Oral Composition)—குறிப்பிட்ட தொடக்கமும் முடிபும் கொண்ட தனித்தனி நிகழ்ச்சிகளைக் கூறச் செய்தல் - என்பதே பாட இயலில் கண்டது. இப் பகுதியைப் பழக்க 12 மாதிரி நிகழ்ச்சிகள் எளிய முறையில் தரப்பட்டுள்ளன.

3. சிறு நாடகக் காட்சிகளை நடிக்கப் பழக்குதல் என்பதும் பாட இயல் கூற்று. இதற்கு 6 நாடகக் காட்சிகள் மாதிரியாகத் தரப்பட்டுள்ளன.

இம் மூன்று பகுதிகளிலும் உள்ள செய்திகள் மூன்றும் வகுப்பு மாணவர் நிலையில் இருந்தே எழுதப்பட்டவை என்பதை, இதனை ஒரு முறை உற்று நோக்குவோர் நன்கு உணர்தல் கூடும். பல நிகழ்ச்சிகளைக் கூறப் பழக்கவும், சிறு நாடகக் காட்சிகளை நடிக்கப் பழக்கவும் - இங்குத் தரப்பட்டுள்ள மாதிரிப் பாடங்கள் பேருதவி புரியும் என்னல் மிகையாகாது.

முத்தியாலுப்பேட்டை
உயர்கலைக் கழகம்,
சென்னை.

மா. இராசமாணிக்கம்.

பொருள் அடக்கம்

எண்	பொருள்		பக்கம்
	இலக்கணம்		
1.	பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும்	...	1
2.	ஒருமை — பன்மை	...	10
3.	வாக்கியம்	...	15
4.	தமிழ் எழுத்துகள்	...	19
5.	தேர்வு வினாக்கள்	...	21
	நிகழ்ச்சிகளைக் கூறுதல்		
1.	ஆபத்தில் உதவி	...	25
2.	வண்டி குடை சாய்ந்தது	...	26
3.	மாடு முட்டியது	...	27
4.	காக்கையும் வடையும்	...	28
5.	ஜானும் யானையும்	...	29
6.	வரதனும் வண்டியும்	...	30
7.	நேற்றுப் பெய்த மழை	...	31
8.	புலிக் கூண்டு	...	32
9.	தம்பியைக் காத்த நாய்	...	34
10.	நேற்று அடித்த காற்று	...	35
11.	வழி தவறிய சிறுவன்	...	36
12.	தேர் விழா	...	37

சிறு நாடகக் காட்சிகள்

1.	செஞ்சிலுவைச் சங்கத்தார்	...	41
2.	சோம்பேறி மாணவன்	...	43
3.	அழுக்கு மாணவன்	...	45
4.	இரண்டு நண்பர்கள்	...	46
5.	தசரதனும் விஸ்வாமித்திரரும்	...	49
6.	இராமனும் இலக்குவனும்	...	51

இலக்கணப் பகுதி

OFFICE OF THE
27 APR 1943

சேக்கிழார்

இலக்கணமும் கட்டுரையும்

I. பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும்

1. முருகன் வந்தான் :—இதில் முருகன் என்பது ஒருவனைக் குறிக்கும் சொல்; அஃதாவது ஒருவனது **பெயர்.** வந்தான் என்பது அவன் செய்த **வினை** (தொழில்). ஆதலால், முருகன் என்பது **பெயர்ச் சொல்** ; வந்தான் என்பது **வினைச் சொல்** ஆகும்.

ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல். அப் பொருள் செய்யும் வினையை (தொழிலை)க் குறிப்பது வினைச் சொல்.

பயிற்சி

இவற்றில் வரும் (i) பெயர்ச் சொற்களையும், (ii) வினைச் சொற்களையும் கூறுக :—

(i) 1. கண்ணன் படித்தான்.
2. வரதன் விளையாடுகிறான்.
3. குப்பன் உண்கின்றான்.
4. வள்ளி பாடினாள்.
5. வண்ணான் வருவான்.
6. அண்ணன் பேசுவான்.
7. பூனை ஓடுகிறது.

8. மயில் ஆடுகின்றது.
9. பசுக்கள் மேய்கின்றன.
10. அவர்கள் நீராடுகிறார்கள்.
11. கோகிலம் பார்ப்பாள்.
12. கண்ணகி வணங்குகிறாள்.

(ii) 1. கண்ணன் பாடம் படித்தான்.
2. குப்பன் சோறு உண்கிறான்.
3. வள்ளி பாட்டுப் பாடினாள்.
4. பசுக்கள் புல்லை மேய்கின்றன.
5. கோகிலம் படத்தைப் பார்ப்பாள்.
6. கண்ணகி கடவுளை வணங்குகிறாள்.
7. மயில் தோகை விரித்து ஆடுகிறது.
8. அண்ணன் தம்பியுடன் பேசுவான்.
9. வண்ணான் நாளை வருவான்.
10. அவர்கள் குளத்தில் நீராடுகிறார்கள்.
11. பூனை எலியைத் துரத்தி ஓடுகிறது.
12. வரதன் பந்து ஆடுகிறான்.

2. **நான் போனேன்** :—இதில் **நான்** என்பது பேசுவோனைக் குறிப்பது. **போனேன்** என்பது பேசுவோன் செய்த வினையைக் குறிப்பது. எனவே, **நான்** என்பது பெயர்ச் சொல்; **போனேன்** என்பது **வினைச்** சொல் ஆகும்.

நான், நாம், நாங்கள் } இவை எல்லாம்
நீ, நீர், நீங்கள் } பெயர்ச் சொற்களே.

பெயர்ச் சொல் வினைச் சொல்

பெயர்ச் சொல்	வினைச் சொல்
(1) நான்	வந்தேன், வருகிறேன், வருவேன்.
(2) நாம், நாங்கள்	வந்தோம், வருகிறோம், வருவோம்.
(3) நீ	வந்தாய், வருகிறாய், வருவாய்.
(4) நீங்கள்	வந்தீர்கள், வருகிறீர்கள், வருவீர்கள்.

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தக்க பெயர்ச் சொற்களை அமைத்துப் படி :—

1.———வந்தேன்.
2.———வந்தீர்.
3.———வந்தார்கள்.
4.———வந்தாய்.
5.———வந்தான்.
6.———வந்தாள்.
7.———வந்தோம்.
8.———வந்தாள்.
9.———வந்தன.

II. கீழ்க்கண்ட வினைச் சொற்களில் ஏற்றதைக் கோடிட்ட இடத்தில் அமைத்துப் படி .—

வந்தேன்	வந்தோம்	வந்தாய்
வந்தீர்	வந்தான்	வந்தாள்
வந்தார்கள்	வந்தது	வந்தன

1. நான்——.
2. அவை——.

3. மாடு——.
4. நாங்கள்——.
5. நீ——.
6. அவர்கள்——.
7. நீர்——.
8. முருகன்——.
9. வள்ளி——.

3. முருகன் நடந்து வந்தான் :—இதில்,

முருகன் - பெயர்ச் சொல்.
வந்தான் - வினைச் சொல்.
நடந்து — ?

நடந்து என்பது முருகன் செய்த **வினையை** (தொழிலை)யே உணர்த்துகிறது. ஆதலால், **நடந்து** என்பதும் வந்தான் என்பது போல **வினைச் சொல்லே** ஆகும்.

நடந்து, நடக்க போய், போக வந்து, வர	இப்படி வருவன எல்லாம் வினையைக் குறிப்பனவே ஆதலால், **வினைச் சொற்கள்** என்றே அறிக.

பயிற்சி

I. பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் கண்டு பிடி :—

1. நான் நடந்து போனேன்.
2. கண்ணன் எழுந்து வருகிறான்.

3. சிதை கருத்தாய்ப் படிப்பாள்.
4. நாங்கள் விழுந்து எழுந்தோம்.
5. நீங்கள் அலறி எழுந்தீர்கள்.
6. எலி குதித்து ஓடிற்று.
7. புலிகள் பதுங்கிப் பாய்கின்றன.
8. நீ குனிந்து வா.
9. வீரர்கள் ஓடி வருகிறார்கள்.

II. பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் கண்டு பிடி :—

1. நானும் குப்பனும் விழுந்து எழுந்தோம்.
2. நீயும் நானும் ஓடி ஆடினோம்.
3. அவனும் அவளும் புத்தகம் படிக்கிறார்கள்.
4. நாங்கள் முருகனோடு விழுந்து விழுந்து சிரித்தோம்.
5. அவர்கள் பதுங்கிப் பதுங்கி வருகிறார்கள்.
6. எலியும் பூனையும் ஓடுகின்றன.

4. ஓடின பையன் விளையாடுகிறான் :—இதில்,

பையன் - பெயர்ச் சொல்.
விளையாடுகிறான் - வினைச் சொல்
ஓடின - ?

ஓடின என்பது பையன் செய்த **வினையை** (தொழிலை)யே தெரிவிக்கிறது. ஆதலால், **ஓடின**

என்பது விளையாடுகிறான் என்பது போல **வினைச் சொல்லே** ஆகும்.

ஓடின, ஓடுகிற, ஓடும் (பையன்) நடந்த, நடக்கிற, நடக்கும் (பையன்) போன, போகிற, போகும் (பையன்)	இப்படி வருவன எல்லாம் வினையையே குறிப்பதால், வினைச்சொற்களே ஆகும்.

பயிற்சி

I. பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் கண்டு பிடி :—

1. வந்த வரதன் வழுக்கி விழுந்தான்.
2. போன கண்ணன் பாடி வந்தான்.
3. ஓடுகிற பையன் விழுந்து எழுவான்.
4. ஆடுகின்ற மயில் சுற்றி ஆடும்.
5. தேடின திருடன் மறைந்து ஓடுகிறான்.
6. அழுகிற பிள்ளைக்குப் பால் கொடு.
7. வருகின்ற மாமாவை அழை.
8. கேட்ட பையன் தேடி வருவான்.
9. ஓடின கந்தன் கதறிக் கதறி அழுதான்.
10. பதைத்துப் போன பரந்தாமன் நடந்து வருகிறான்.

II. கீழ்க் கண்ட சொற்களில் தக்கதைக் கோடிட்ட இடத்தில் அமைத்துப் படி :—

பாடின விழுந்த நடந்த
தாண்டின எழுதுகிற வந்த

1. நேற்றுப்——பெண் வருகிறாள்.
2. ——மாமன் எழுந்து போவான்.
3. வழுக்கி——பையன் அழுகிறான்.
4. நேற்று——நாடகம் நல்லது.
5. ——குதிரை பாய்ந்து ஓடுகிறது.
6. நீ——பாடம் நல்லதே.

போதுப் பயிற்சி

I. கீழ்க் கண்டபடி ஒரு கட்டம் போட்டுப் பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் எழுது :—

எண்	பெயர்ச் சொல்	வினைச் சொல்
1		
2		
3		
4		
5		
6		

1. கமலம் வீணை வாசிக்கிறாள்.
2. முருகன் ஓடு மாற்றுகிறான்.
3. நீ வேகமாக ஓடு.
4. ஆடு ஒதுங்கிப் போகிறது.

5. கந்தன் விளைந்து ஓடுகிறான்.
6. அவன் விளைந்து விளைந்து ஓடுகிறான்.
7. படித்த பையன் எழுந்து போனான்.
8. விளையாடப் போன கண்ணன் வழுக்கி வீழ்ந்தான்.
9. நீ பார்த்த மனிதன் மெதுவாகச் சென்றான்.
10. படித்த மனிதன் திரும்பிப் பார்த்தான்.
11. ஆடுகின்ற குயில் தலையை அசைக்கிறது.
12. தேடிய மாமன் வந்துவிட்டான்.

II. கோடிட்ட இடங்களில் கீழ்க் கண்ட வினைச் சொற்களில் ஏற்றவற்றை அமைத்து வாசி :—

வாசித்தாள்	ஊதுகிறான்	போடுகிறேன்
பார்க்கிறார்	வாருங்கள்	படித்தோம்

1. கமலம் வீணை——.
2. கண்ணன் குழல்——.
3. நாங்கள் பாடம்——.
4. நான் தாளம்——.
5. அவர் வேடிக்கை——.
6. நீங்கள் வீட்டிற்கு——.

III. கீழ்க் கண்ட பெயர்ச் சொற்களில் ஏற்றவற்றைக் கோடிட்ட இடங்களில் அமைத்துப் படி :—

வரதன்	இராணி	நான்
கழுதை	பசுக்கள்	நீங்கள்
நீ	நாங்கள்	வீரர்கள்

1.——மழையிற் சென்று வழுக்கி விழுந்தேன்.

2.——பாடத்தை அழுத்தமாகப் படி.

3.——கிரீடத்தை அணிந்து வந்தான்.

4.——ஓடி ஆடி விளையாடினோம்.

5.——ஏன் பயந்து நின்று பார்க்கிறீர்கள் ?

6.——வயிறு ஆரப் புல் மேய்கின்றன.

7.——பொதி சுமந்து மெதுவாகச் செல்கிறது.

8. நடந்து வந்த——களைத்து நின்றான்.

9. பாடி வந்த——பரிசு பெறுவாய்.

IV. எதிர் எதிர் உள்ளவற்றில் பொருத்தமானவற்றைச் சேர்த்து வாசி :—

1.	நான்	பாட்டுப் பாடுகிறீர்கள்.
2.	நாங்கள்	ஏன் வருகிறார்கள் ?
3.	நீ	வளையில் இருக்கிறது.
4.	நீங்கள்	வெண்ணெய் தின்பான்.
5.	அவர்கள்	பந்து ஆடுகிறோம்.
6.	நண்டு	அப்பளம் செய்கிறாள்.
7.	குதிரை	ஓடி ஆடுகிறாய்.
8.	அம்மணி	வயலை உழுகின்றன.
9.	கண்ணன்	வண்டி இழுக்கும்.
10.	எருதுகள்	பாடம் படிக்கிறேன்.

II. ஒருமை—பன்மை

பெயர்ச் சொல்

1. பசு — ஒரு விலங்கின் பெயர்.
   பசுக்கள் — பல விலங்குகளின் பெயர்.

ஒன்றைக் குறிப்பது ஒருமை எண், ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது **பன்மை எண்** எனப் படும்.

2. மாணவன் — ஒருமை எண்
   மாணவி — ஒருமை எண்
   மாணவர் — பன்மை எண்

3. அரசன் — ஒருமை எண்
   அரசி — ஒருமை எண்
   அரசர், அரசியர் } —பன்மை எண்

4. ஒருவன் — ஒருமை எண்
   இருவர் — பன்மை எண்
   பலர், சிலர் — பன்மை எண்

5. நான் — ஒருமை எண்
   நாம், நாங்கள் — பன்மை எண்

6. நீ — ஒருமை எண்
   நீர், நீங்கள் — பன்மை எண்

பயிற்சி

இவற்றில் உள்ள ஒருமை—பன்மைகளை எழுது :—

எண்	ஒருமை	பன்மை
1		
2		
3		
4		
5		
6		

1. கந்தன், கழுதைகள், ஆடு, மாடுகள், மனிதர், பையன், மலர்கள், குழல், கத்திகள், சுந்தரன், சுந்தரி, வீரர்கள், நாற்காலி, கட்டில்கள், அரசர், அரசியர், மரம், செடிகள், காடு, தோட்டங்கள், பயிர்.

2. பன்மை எண் கூறு :—

பெட்டி, பிள்ளை, பசு, நாய், புழு, வேலை, கடல், ஆண், பெண், தாய், குரு.

3. ஒருமை எண் கூறு :—

மலர்கள், கத்திகள், அரசியர், அரசர், வீரர், செடிகள், தோட்டங்கள், மனிதர், மாடுகள்.

வினைச் சொல்

1. நான் வந்தேன்		— ஒருமை எண்
நாம் நாங்கள்	} வந்தோம்	— பன்மை எண்
2. நீ வந்தாய்		— ஒருமை எண்
நீங்கள் வந்தீர்கள்		— பன்மை எண்
3. அரசன் வந்தான்		— ஒருமை எண்
அரசி வந்தாள்		— ஒருமை எண்
அரசர்கள் வந்தார்கள்		— பன்மை எண்
4. பசு வந்தது		— ஒருமை எண்
பசுக்கள் வந்தன		— பன்மை எண்

பயிற்சி

இவ் வினைச் சொற்களில் ஒருமை—பன்மைகளைக் கூறு :—

படிக்கிறேன், ஓடினோம், ஆடினாய், வாருங்கள், சென்றீர்கள், எழுந்திரு, பாடினார்கள், அழுதாள், துடித்தான், ஓடுகிறது, நாடின, தேடிற்று, பேசுகின்றன, படிப்பாய், படிப்பீர், எண்ணிப் பார், நினையாதீர், செய்தான், ஆடுகிறான்.

ஒருமைப் பெயர்	ஒருமை வினை
1. நான்	வந்தேன், வருகிறேன், வருவேன்.
2. நீ	வந்தாய், வருகிறாய், வருவாய்.
3. அவன்	வந்தான், வருகிறான், வருவான்.

4.	அவள்	வந்தாள், வருகிருள், வருவாள்.
5.	அது	வந்தது, வருகிறது, வரும்.

பன்மைப் பெயர்	பன்மை வினை
நாம், நாங்கள்	வந்தோம், வருகிறோம். வருவோம்.
நீங்கள்	வந்தீர்கள், வருகின்றீர்கள், வருவீர்கள்.
அரசர், அரசியர்	வந்தார்கள், வருகின்ருர்கள், வருவார்கள்.
எலிகள், அவை	வந்தன, வருகின்றன, வரும்.

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தக்க ஒருமைப் பெயர்களை இட்டு வாசி :—

1. —— படித்தேன்.
2. —— நடக்கிருய்.
3. —— வந்தானு?
4. —— படிக்கிருள்.
5. —— எலி பிடிக்கிறது.
6. —— புல் மேய்கிறது.

II. கோடிட்ட இடங்களில் தக்க ஒருமை வினைகளை இட்டு வாசி :—

1. நான் பாடம் ——.
2. அவள் வீணை ——.
3. நீ மத்தளம் ——.

4. நாங்கள் வேலை ——.

5. நீங்கள் தண்ணீர் ——.

6. கந்தன் கணக்குப் ——.

7. எலி வளையைத் ——.

8. பறவைகள் வானத்தில் ——.

III. தக்க பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் பொருத்தி வாசி :—

1. நான் தூங்குகிறாள்.
2. நீ ஓடி விட்டன.
3. குப்பன் குளித்தீர்கள்.
4. வள்ளி மேய்கிறது.
5. எலிகள் வருகிறார்கள்.
6. பசு பாடுகிறோம்.
7. நீங்கள் ஆடுகிறான்.
8. அவர்கள் எழுதுகிறேன்.
9. நாங்கள் படிக்கிறாய்.

IV. தடித்த சொற்களில் பெயர்ச் சொற்கள் எவை? வினைச் சொற்கள் எவை?

1. அவன் ஓடு மாற்றுகிறான்; நீ வேகமாக ஓடு.
2. ஆடு மேய்கிறது; நீ அவனுடன் ஆடு.
3. அவன் பட்ட பாடு அதிகம்; நீ ஒரு பாட்டுப் பாடு.
4. இது வாசிப்பு அறை; நீ அவனை அறை.

III. வாக்கியம்

1. வந்தான், வந்து, வந்த - இவை மூன்றும் வினைச் சொற்களே என்று முதற் பாடத்தில் படித்தீர்கள் அல்லவா? ஆயினும், இம் மூன்றில் கருத்து முடிந்து நிற்கும் வினைச் சொல் எது?

கண்ணன் வந்தான் கண்ணன் வந்து வந்த கண்ணன்	இவற்றுள் 'வந்தான்' என்பதே கருத்து முடிந்து நிற்கும் வினைச் சொல். ஆதலால், அது **வினை முற்று** எனப்படும்.

வந்தான், வருகிறான், வருவான் படித்தான், படிக்கிறாள், படிப்பாள்	இவை எல்லாம் வினை முற்றுகளே

2. கண்ணன் வந்தான் - கண்ணன் வந்து - வந்த கண்ணன் -	இவ்வாறு சொற்கள் தொடர்ந்து வர அமைவது சொல் தொடர் எனப்படும்.

ஆனால், இந்த மூன்றிலும் **கண்ணன் வந்தான்** என்பதே கருத்து முடிந்து நிற்கும் சொல் தொடர் ஆகும். ஆகவே, அதுவே முற்றுச் சொல் தொடர் அல்லது **வாக்கியம்** எனப்படும். ஒவ்வொரு வாக்கியத்திலும் வினை முற்று இருந்தே தீரும்.

3. (i) கண்ணன் வந்தான் :— இது இரண்டு சொற்களைக் கொண்ட வாக்கியம்.

(ii) கண்ணன் பாடம் படித்தான் :—இது மூன்று சொற்களைக் கொண்ட வாக்கியம்.

(iii) கண்ணன் பாடம் நன்றாய்ப் படித்தான்- இது நான்கு சொற்களைக் கொண்ட வாக்கியம்.

முற்றுப் புள்ளி

4. இது முற்றுப் புள்ளி எனப்படும். இது ஒவ்வொரு வாக்கியத்தின் கடைசியிலும் இடத் தக்கது.

எழுவாய் - பயனிலை - செயப்படு பொருள்

5. கண்ணன் பாடம் படித்தான் :—இதில் **படித்தான்** என்பது வினை முற்று. இவ் வினை முற்று வாக்கியத்தில் வரும் பொழுது பயனிலை எனப்படும். பயனிலைக்கு முன் '**யார்**' அல்லது '**எது**' என்பதை வைத்து, '**யார்** படித்தான்?' என்று கேட்டால், 'கண்ணன்' என்பது விடை ஆகும். அதுவே வாக்கியத்தில் **எழுவாய்** எனப்படும். பயனிலைக்கு முன் '**எதை**' அல்லது '**யாரை**' என்பதை வைத்து, '**எதைப்** படித்தான்?' என்று கேட்டால், **பாடம்** என்பது விடை ஆகும். அதுவே வாக்கியத்தில் **செயப்படு பொருள்** எனப்படும்.

பயிற்சி

1. இவற்றுள் வினைமுற்றுகள் எவை ?

போனான், போய், போக, வருகிறான், வந்து, வர, நடக்க, நடந்து, நடக்கின்ற, நடப்பான், பாடுவார், பாடி, பாட, ஓடினான், ஓடி, எழுந்தது, எழுந்து, எழ.

2. இவற்றுள் உள்ள வாக்கியங்கள் எவை ?

கந்தன் வந்தான், கண்ணன் போய், நான் பாடம் படித்தேன், நீ எழுந்து ஓடி, அவன் வந்தானா? அவன் வரவில்லை, நீ எங்கே போய், நீ வந்து, வந்த பையன், பையன் படிப்பான்.

3. இவ் வாக்கியங்களில் உள்ள சொற்கள் எத்தனை ?

கந்தன் கதறினான், கண்ணன் போய் வந்தான், நான் பாடத்தை நன்றாய்ப் படித்தேன், அவன் பாடம் படியாமல் காலம் கட த்துகிறான்.

4. தக்க இடங்களில் முற்றுப் புள்ளி இடு :—

(1) கண்ணன் குழல் ஊதினான்

(2) வரதன் எழுந்து போய்

(3) வந்த மாமன் நின்று பேசி

(4) மாமன் மாங்காய் வாங்குகிறான்

5. கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எழுது :—

(1) தாமஸ் கடவுளைத் தொழுதான்.

(2) கண்ணன் குழல் ஊதுவான்.

(3) அம்மணி அப்பம் சுடுகிறாள்.

(4) குதிரை வண்டி இழுக்கிறது.

(5) பசுக்கள் புல்லை மேய்கின்றன.

(6) வீரர்கள் துப்பாக்கி எடுக்கிறார்கள்.

கீழ்க் கண்டவாறு கட்டம் போட்டு, அக் கட்டத்தில் மேற்கண்ட வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எழுதிக் காட்டு:—

எண்	எழுவாய்	பயனிலை	செயப்படுபொருள்
1			
2			
3			
4			
5			
6			

IV. தமிழ் எழுத்துகள்

நாம் பேசுவது தமிழ் மொழி. நாம் படிப்பதும் அதுவே. நாம் எழுதுவதும் அதுவே. அது 247 எழுத்துகளை உடையது. அவற்றுள்,

1. உயிர் எழுத்துகள் — 12
2. மெய் எழுத்துகள் — 18
3. உயிர் மெய் எழுத்துகள் — (12 × 18) 216
4. ஆய்த எழுத்து ஃ — 1

ஆக, மொத்தம் 247 எழுத்துகள்

1. உயிர் எழுத்துகள் — 12

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

2. மெய் எழுத்துகள் — 18

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

3. உயிர்மெய் எழுத்துகள் — 216

க் + அ = க, க் + ஆ = கா. இப்படியே 12 உயிர்களும் 18 மெய்களோடும் தனித்தனிச் சேருவதால் (12 × 18) 216 உயிர்மெய் எழுத்துகள் ஆகின்றன. இதனை அடுத்த பக்கத்திற் காண்க.

+	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

4. ஆய்த எழுத்து—1

ஃ இதுவே ஆய்த எழுத்து எனப்படும். இது, அஃது, இஃது, எஃது — என்பது போலச் சொல்லின் நடுவில் வருவது.

தேர்வு வினாக்கள்

1. பெயர்ச்சொல் என்பது யாது? வினைச்சொல் என்பது யாது?

2. கந்தன் வந்தான், தாமஸ் பாடிப் போனான், நான் எழுந்து வருகிறேன், அண்ணன் அலறி எழுந்தான், வந்த மாமன் நொந்து போனான், வாங்கிய மாம்பழம் அழுகிக் கெட்டது, தூங்கி எழுந்த கண்ணன் அர்ச்சுனனைப் பார்த்தான்.—இவற்றில் உள்ள பெயர்ச் சொற்கள் எவை? வினைச் சொற்கள் எவை?

3. போன, போய்—இவை வினைச் சொற்கள்.—எப்படி?

4. கோடிட்ட இடங்களில் ஏற்ற பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் அமைத்து எழுது:—

1. —— பாடம் படித்தேன்.
2. நீங்கள் பாடம் ——.
3. —— விளையாடுகிறோம்.
4. —— தூங்கி விட்டாய்.
5. கந்தன் பந்து ——.
6. பசுக்கள் புல் ——.
7. பூனை எலியைத் ——.

5. எதிர் எதிர் உள்ளவற்றில் பொருத்தமானவற்றைச் சேர்த்துப் படி :—

(1) நான்	பறக்கின்றன
(2) நீ	பேசுகிறது
(3) கோபாலன்	சிரிக்கிறார்கள்
(4) கோமளம்	படிக்கிறேன்
(5) கிளி	ஆடுகிறான்
(6) பறவைகள்	எழுதுகிறாய்
(7) அவர்கள்	பாடுகிறாள்

6. நான், நாங்கள், வந்தாய், ஓடுகிறீர்கள், வந்தாயா? பாடு, பாடுங்கள், நீ, வருகிறான், போகிறான், சுற்றுகிறது, பாய்கின்றன, நீங்கள்.—இவற்றில் உள்ள ஒருமை—பன்மைகளைக் கட்டம் போட்டு எழுது.

7. சொல் தொடர் யாது ? வாக்கியம் யாது ?

8. வரதன் வந்து போய், கந்தன் பாடம் படித்து, வந்த மாமன் வழுக்கி, நான் படித்தேன், நீ வந்தாய், அரசர் ஆட்சி செய்கிறார், கண்ணன் பாட்டுப் பாடுகிறான்.—இவற்றில் உள்ள வாக்கியங்கள் எவை ?

9. அவ் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கட்டம் இட்டு எழுதிக் காட்டு.

10. நமது மொழி எது? அதன் மொத்த எழுத்துகள் எத்தனை ?

11. அந்த எழுத்துகளின் வகை என்ன?

12. முற்றுப் புள்ளி எங்கே இட வேண்டுவது ? ஏன்?

நிகழ்ச்சிகளைக் கூறுதல்

நிகழ்ச்சிகளைக் கூறுதல் *

Oral Composition

1. ஆபத்தில் உதவி

ஆசிரியர்:—கோபாலா, நீ காலை குளத்திற்குச் சென்றிருந்த பொழுது அங்கு ஏதோ நடந்ததாகச் சொன்னாய் அல்லவா ? அது யாது ?

கோபாலன்:—ஐயா, நான் இன்று காலை எட்டாம் வகுப்பு ஏகாம்பரத்துடன் குளத்திற்குப் போனேன். அங்குப் பலர் குளித்துக்கொண்டு இருந்தனர். நானும் கோபாலனும் துணி தப்பிக் கொண்டு இருந்தோம். அச் சமயத்தில், 'ஐயோ, என் மகன் விழுந்து விட்டானே!' என்னும் ஓசை கேட்டது. நாங்கள் திரும்பிப்பார்த்தோம். உடனே கோபாலன் நீரில் குதித்தான்; மூன்று வயதுடைய ஒரு பையனுடன் கரைக்கு வந்தான். கரையில்

---

* குறிப்பு:—பிள்ளைகள் தாமே அநுபவித்தவற்றையும் நேரிற் கண்டவற்றையும் கோவைபடச் சொல்லச் செய்தலே இதன் நோக்கம். ஆசிரியர் கேட்க, மாணவர் கூறுவதாக உள்ள மாதிரிச் செய்திகள் 12 இங்கு எழுதப்பட்டுள்ளன. இவைபோன்ற பல நிகழ்ச்சிகளையும் பிள்ளைகள் கூறக் கேட்டு ஆசிரியர் திருத்துதல் சிறந்த முறையாகும்.

இருந்த எல்லோரும் கோபாலனை வாழ்த்தினர்கள். தாய் அந்தச் சிறுவனை அணைத்துக்கொண்டாள்.

ஆசிரியர் :—நீ இந்த நிகழ்ச்சியால் அறியும் நீதி யாது?

கோபாலன் :—பிறருக்கு ஆபத்து வரும் பொழுது உதவி செய்ய வேண்டும் என்பதே நான் அறியும் நீதி ஆகும்.

2. வண்டி குடை சாய்ந்தது

ஆசிரியர் :—கோவிந்தா, நீ நேற்று வந்த வண்டி வழியில் குடை சாய்ந்தது என்றாயே அது எப்படி? விளக்கமாகச் சொல்.

கோவிந்தன் :—ஐயா, நான் மஹாபலிபுரத்திலிருந்து நமது ஊருக்கு வண்டியில் வந்தேன். அந்த வண்டியில் என் தகப்பனாரும் தமையனாரும் உடன் இருந்தனர். வண்டி நமது ஏரிக்கரை ஓரமாக வந்தது. அப்பொழுது எங்கள் வண்டியுடன் ஒருவன் நடந்து வந்தான். எங்கள் வண்டிக்காரன் அவனுடன் பேசிக்கொண்டே கவனம் இல்லாமல் வண்டியை ஓட்டினான். திடீரென ஒரு சக்கரம் பள்ளத்தில் இறங்கியது. உடனே என் தகப்பனாரும் தமையனாரும் கீழே குதித்தனர்;

என்னைக் கீழே இறக்கிவிட்டனர். அவ்வளவுதான்; உடனே வண்டி சாய்ந்து விட்டது. வண்டிக்கார னும் குதித்து விட்டான். 'நாம் உயிர் தப்பி யது கடவுள் அருள்' என்று என் தகப்பனார் சொன்னார்.

ஆசிரியர் :—கோவிந்தா, நீ இந்த நிகழ்ச்சியி லிருந்து கற்ற பாடம் என்ன?

கோவிந்தன் :—ஐயா, 'எந்த வேலையையும் கவனத்துடன் செய்ய வேண்டும்!' என்பதே நான் கற்ற பாடம் ஆகும்.

3. மாடு முட்டியது

ஆசிரியர் :—தாமஸ் நேற்று உன் தம்பியை மாடு முட்டியதென்று கூறினாய் அல்லவா? அந்த நிகழ்ச்சியை விவரமாகச் சொல்.

தாமஸ் :—ஐயா என் தம்பிக்கு மூன்று வயது ஆகிறது. அவன் நேற்றுக் காலையில் தெருவில் விளையாடிக்கொண்டு இருந்தான். அவனுடன் வேறு பிள்ளைகளும் இருந்தார்கள். எல்லோரும் நடுத் தெருவில் உட்கார்ந்து விளையாடினார்கள். அந்த நேரத்தில் ஒரு பசு மாடு வேகமாக ஓடி வந்தது. அதைக் கண்ட பிள்ளைகள் மூலைக்கு ஒரு வராக ஓடிவிட்டார்கள். ஆனால் என் தம்பி மாட்

டைக் கவனிக்கவே இல்லை. அவன் எழுந்து நின்று தன்னைத் தானே சுற்றிக்கொண்டு இருந்தான். அந்தச் சமயத்தில் அந்த மாடு அவனை முட்டிக் கீழே தள்ளிவிட்டு ஓடிவிட்டது. பாவம்! என் தம்பி 'ஓ' என்று அலறினான். அந்த ஓசை கேட்டு என் தாயார் ஓடினார்; என் தம்பியை எடுத்து அணைத்துக் கொண்டார்.

ஆசிரியர்:—தாமஸ், இந்த நிகழ்ச்சியிலிருந்து நீ கற்ற பாடம் என்ன?

தாமஸ்:—'பிள்ளைகளைத் தெருவில் விளையாட விடக் கூடாது' என்பதே நான் கற்ற பாடம்.

4. காக்கையும் வடையும்

ஆசிரியர்:—பிள்ளைகளே, நீங்கள் இன்று பள்ளிக்கு வரும்பொழுது வழியில் ஏதேனும் நிகழ்ச்சி நடந்தது உண்டா?

முருகன்:—ஐயா, நான் ஒரு நிகழ்ச்சியைக் கண்டேன். நான் வரும் வழியில் ஆல மரம் ஒன்று இருக்கிறது. அதன் அடியில் கிழவி ஒருத்தி வடைகளை விற்றுக்கொண்டு இருந்தாள். நான் அங்குப் போன சமயம் குடியர் இருவர் சண்டை இட்டனர். கிழவி சண்டையையே கவனித்துக்கொண்டு இருந்தாள். அப்பொழுது ஒரு காகம் தத்தித் தத்தி

வடைத் தட்டின் பக்கத்தில் வந்தது. நான் அக் காகத்தையே கவனித்துக்கொண்டு இருந்தேன். அது திடீரென்று பாய்ந்து ஒரு வடையைக் கவ்விக்கொண்டு ஓடிவிட்டது. உடனே கிழவி திரும்பிப் பார்த்தாள்; ஒரு வடை குறைந்ததை உணர்ந்தாள். நான் அவளைப் பார்த்து, 'பாட்டீ, உன் வேலையைக் கவனிக்காததால் அல்லவா ஒரு வடை இழந்தாய் !' என்றேன். கிழவி வெட்கம் அடைந்தாள்.

5. ஜானும் யானையும்

ஆசிரியர் :—பிள்ளைகளே, நமது ஊருக்கு நேற்று வந்த கோவில் யானையைப் போய்ப் பார்த்தீர்களா ?

அப்துல்லா :—ஐயா, நாங்கள் எல்லோரும் போய்ப் பார்த்தோம். அங்கு ஜான் ஒரு குறும்பு செய்து, ஆபத்தில் சிக்கிக்கொண்டான்.

ஆசிரியர் :—அப்படியா அதை விளக்கமாகக் கூறு.

அப்துல்லா :—ஐயா, நாங்கள் எல்லோரும் தூரத்தில் நின்றே யானையைக் கவனித்துக் கொண்டு இருந்தோம். அப்பொழுது ஜான் திடீ ரென்று யானையிடம் சென்றான்; தன் கையை நீட்டி

ஞன். யானே, அவன் எதையோ தருவதாக எண்ணித் துதிக்கையை நீட்டியது. ஜான் அதன் துதிக்கையை ஊசியால் குத்தினன். உடனே அந்த யானே அவனைத் துதிக்கையால் பிடித்துக் கொண்டது. பாவம்! ஜான் பயந்து அலறினன். நல்ல வேளை ! யானைப் பாகன் ஓடிவந்தான். அவன் யானையைப் பார்த்து ஏதோ சத்தமிட்டுச் சொன்ஞன். உடனே யானே ஜானே விட்டுவிட்டது.

ஆசிரியர்:—ஜான், அந்த நிகழ்ச்சியிலிருந்து நீ கற்ற பாடம் யாது ?

ஜான்:—ஐயா, நான், 'யானேயினிடம் குறும்பு செய்யலாகாது' என்பதை அறிந்தேன்.

6. வரதனும் வண்டியும்

ஆசிரியர் :—நாராயணு, வரதன் ஏன் இன்று பள்ளிக்கு வரவில்லை ?

நாராயணன் :—ஐயா, அவன் காலையில் ஒரு வண்டிக்குப் பின் ஓடிக் காயம் அடைந்தான். அதனல் பள்ளிக்கு வரவில்லை.

ஆசிரியர்:—அப்படியா ! அந்த நிகழ்ச்சியை எல்லோரும் அறியும்படி கூறு.

நாராயணன் :—ஐயா, காலையில் எங்கள் குதிரை வண்டி ஊருக்குப் புறப்பட்டது. வரதன், வண்டிக்குப் பின் உள்ள கால் வைத்து ஏறும் பலகையைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு இருந்தான். வண்டி புறப்பட்டும் அவன் பலகையை விடவில்லை. வண்டி வேகமாகச் சென்றது. வரதனும் தொங்கிக்கொண்டே சென்ருன். நமது குளத்தண்டை உள்ள வாய்க்காலைத் தாண்டும் பொழுது உண்டான அதிர்ச்சியால், வரதன் வாய்க்காலில் விழுந்துவிட்டான். அவன் உடனே 'ஓ' என்று அலறினுன். உடனே வண்டி நின்றது. என் தகப்பனுர் நடந்ததை அறிந்தார்; கீழே இறங்கி வரதனைத் தூக்கினுர். அவன் கற்கள்மீது விழுந்ததால் சில இடங்களில் காயங்கள் பட்டிருந்தன. என் தகப்பனுர் அவனை வீடு சேர்த்தார்.

ஆசிரியர் :—பிள்ளைகளே, வரதன் பட்ட பாட்டிலிருந்து நீங்கள் கற்கும் பாடம் யாது?

பிள்ளைகள் :—'வண்டிப் பலகையைப் பற்றித் தொங்கிக்கொண்டு ஓடுதல் தவறு' என்பதை அறிகிருேம்.

7. நேற்றுப் பெய்த மழை

ஆசிரியர் :—கண்ணு, நேற்றுப் பெய்த மழையைப் பற்றி நீ அறிந்ததைக் கூறு.

கண்ணன் :—ஐயா, நேற்றுப் பெய்த மழை மிகவும் கடுமையானது. அதனால் அல்லவா நேற்றுப் பள்ளிக்கூடம் மூடப்பட்டது! எங்கள் வீடு தென்னை ஓலைக் கூரை உடையது. அக்கூரை மிகவும் பழையது. அதனால் நேற்று வீடெங்கும் ஒழுக்கு எடுத்தது. நாங்கள் இருக்க இடம் இல்லாமல் தவித்தோம். தெருவில் மழை நீர் சிறிய ஆறுபோல ஓட்டம் எடுத்தது. நேற்றுச் சுமார் மூன்று மணி நேரம் மழை விடாமற் பெய்தது. இடி ஓசை கேட்டது; மின்னலும் இருந்தது. அப்பொழுது என் பெற்றோர், 'அர்ஜுனா! அர்ஜுனா!' என்றனர். நான், 'என் அப்பெயரைச் சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டேன். அவர்கள், "அர்ஜுனன் தேர் ஓசையே இடி" என்றார்கள். நான், "அது இல்லை; மழையைப் பெய்யும் மேகங்கள் ஒன்றோடு ஒன்று முட்டுவதால் இவ்வோசை உண்டாகிறது. இதுவே இடி என்று ஆசிரியர் சொன்னார்" என்றேன். அவர்கள், "அப்படியா!" என்று வியப்பு அடைந்தார்கள்.

8. புலிக் கூண்டு

ஆசிரியர்:—சரவணா, உன் முன் கையில் கட்டு இருக்கக் காரணம் யாது?

சரவணன் :—ஐயா, புலி என் கையில் கீறி விட்டது.

ஆசிரியர் :—என்ன, புலியா கீறி விட்டது? விஷயத்தை விளங்கச் சொல்.

சரவணன் :—நான் நேற்று மாலை என் தகப்பனுருடன் சர்க்கஸ் மைதானம் சென்றேன். அங்கு ஒரு கூண்டில் புலி படுத்து இருந்தது. அதை என் தகப்பனர் சுட்டிக் காட்டினர். நான் அதை வியப்போடு பார்த்துக் கொண்டு இருந்தேன். என் தகப்பனர் பக்கத்தில் நின்ற ஒருவருடன் பேசிக்கொண்டு இருந்தார். புலி தன் முன் கால்களை வெளியே நீட்டி இருந்தது. நான் ஒரு காலைத் தொட்டுப் பார்க்க விரும்பினேன். அதனல் திடீ ரென்று முன் சென்று கையை நீட்டினேன். உடனே புலி ஒரு கையை எடுத்து என் முன் கை மீது அறைந்தது. அதன் கூரிய நகரங்கள் என் முன் கைத் தோலைப் பிய்த்து விட்டன. இதற்குள் என் தகப்பனர் முதலியோர் ஓடி வந்தனர்; என்னைத் தூரத்தில் இழுத்து வந்தனர். உடனே நாங்கள் வைத்தியரிடம் ஓடினேம். அவர் உயர்ந்த மருந்தை வைத்துக் கட்டினர். இப்பொழுது வலி தணிந்து இருக்கிறது.

ஆசிரியர்:—சரவணா, நீ செய்தது பெரிய தவறு. இதனல் நீ கற்ற பாடம் என்ன?

சரவணன் :—ஐயா, 'கொடிய விலங்குகளிடம் விளையாட்டுக் கூடாது' என்பதே நான் கற்ற பாடம்.

9. தம்பியைக் காத்த நாய்

ஆசிரியர் :—நாய் மிக்க அறிவுள்ள உயிர். இவ் வுண்மையை அதன் செயல் கொண்டே அறியலாம்.

இளங்கோ :—ஐயா, தாங்கள் கூறுவது உண்மையே, நான் அதன் செயலைக் கவனித்து இருக்கிறேன்.

ஆசிரியர் :—அதன் செயலை விளங்கக் கூறு.

இளங்கோ .—நான்கு நாட்களுக்கு முன் நான்கு பன்றிகள் எங்கள் வீட்டுப் பின் புறம் வந்தன. அங்குச் சாக்கடைக் குழி இருக்கிறது. அவை அதில் இறங்கிப் புரண்டன. என் தம்பி வஞ்சிக்கோ, ஒரு கல் எடுத்து அவற்றின்மீது போட்டான். உடனே ஒரு பன்றி அவனைத் துரத்த வந்தது. அதுவரை எங்கள் நாய் பேசாமல் இருந்தது. பன்றி என் தம்பியிடம் வருவ

தைக் கண்டதும் நாய் குரைத்துக் கொண்டே அதனைத் துரத்தத் தொடங்கியது. உடனே நான்கு பன்றிகளும் ஒன்று சேர்ந்து நாயை எதிர்த்தன. அப்பொழுது நான், நாய்க்கு உதவியாகப் போனேன். பன்றிகள் ஓடி விட்டன.

10. நேற்று அடித்த காற்று

ஆசிரியர்:—கமலா, நேற்று அடித்த காற்றைப் பற்றி நீ அறிந்ததைக் கூறு.

கமலம்:—ஐயா, நேற்று மாலை நாங்கள் பள்ளிக்கூடம் விட்டு வீடு செல்வதற்குள் காற்றுப் பலமாக அடிக்கத் தொடங்கியது. நானும் சொக்கம்மாளும் காற்றில் அகப்பட்டுக் கொண்டோம். காற்று மேற்குத்திசையில் இருந்து கடுமையாக வீசியது. நாங்கள் கண்களை மூடிக்கொண்டோம். கோவிந்தன் கூவிக்கொண்டே ஓடிவந்தான். நாங்கள் கண்களைத் திறந்து பார்த்தோம். அவன்மேல் போர்த்திருந்த துண்டைக் காற்று அடித்துக் கொண்டு போனது. பிறகு ஜான் வேகமாக ஓடிப்போய் அதை எடுத்து வந்தான். மங்களம் விரித்துப் பிடித்த குடை தலை கீழாக மாறிவிட்டது. அவள்

அழத் தொடங்கினாள். தாமோதரன் அக்குடையை ஒழுங்கு படுத்திக் கொடுத்தான். ஐயா, நேற்று அடித்த காற்றைப் போன்றதை நான் முன் கண்டதே இல்லை.

11. வழி தவறிய சிறுவன்

ஆசிரியர்:—நேற்று இரவு நடந்த திருவிழா வில் ஏதேனும் நிகழ்ச்சி உண்டா?

நக்கீரன்:—ஐயா, ஒரு சிறுவன் கூட்டத்தில் அகப்பட்டுக் கொண்டான். அவனுக்கு ஆறு வயது இருக்கலாம். அவன் பெற்றோர் ஒரு பக்க மும் அவன் ஒரு பக்கமுமாகப் பிரிந்து விட்டனர். நான், அவன் சுற்றிலும் பார்த்துப் பார்த்து விழிப்பதைக் கண்டேன். நான் அவனிடம் சென்று, 'தம்பீ, உன் அம்மா, அப்பா எங்கே?' என்றேன். அவன் உடனே அழத் தொடங்கினான். நான் 'உன் அப்பா பெயர் என்ன?' என்றேன். அவன், 'சுந்தரம் ஐயர்' என்றான். 'நீ எந்தத் தெருவில் இருக்கிறாய்?' என்றேன். அவன், 'மேட் டுத் தெரு' என்றான். நான் உடனே அவனை அழைத்துக் கொண்டு கூட்டத்தை விட்டு

வெளியே வந்தேன். அங்கு ஒரு போலீஸ் சேவகர் நின்று கொண்டு இருந்தார். நான் அவரிடம் விவரத்தைக் கூறிச் சிறுவனை அவரிடம் ஒப்புவித்து வீடு திரும்பினேன்.

12. தேர் விழா

ஆசிரியர்:—சுந்தரன், நேற்று நடந்த தேர் விழாவில் நீ கண்டதைக் கூறு.

சுந்தரன்:—ஐயா, தேர் சிவன் கோவிலுக்குச் சொந்தமானது. அது மிகவும் உயரமானது. மேல்பாகம் பல நிறங்களைக் கொண்ட துணிகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. உச்சியில் கலசம் அழகாகக் காணப்பட்டது. அதன்மீது சிறிய குடை ஒன்று இருந்தது. தேர்த் தட்டின் மீது சுவாமி - அம்மன் உருவங்கள் காணப்பட்டன. அவற்றின்மீது இருந்த நகைகளுக்கும் பூ மாலைகளுக்கும் அளவில்லை. தேர்த் தட்டின்மீது நான்கு வாழை மரங்கள் கட்டப்பட்டு இருந்தன. குருக்களும் மேளக்காரரும் அங்கு இருந்தார்கள். தேர்ச் சக்கரங்கள் மிகப் பெரியவை. தேர் வடமோ நீண்டும் பருத்தும் இருந்தது. இரண்டு வடங்களை

யும் சுமார் ஐந்நூறு பேர் பிடித்து இழுத்துச் சென்றனர். தேர் ஓடும் போது தேரில் இருந்த சிறு மணிகள் கலகல என ஒலித்தன. வழி நெடுகப் பூசைகள் நடந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் தேர் விழாவைக் கண்டு களித்தார்கள். தேர்விழா பார்க்கத் தக்கதே.

சிறு நாடகக் காட்சிகள்

சிறு நாடகக் காட்சிகள்*

1. செஞ்சிலுவைச் சங்கத்தார்

[செஞ்சிலுவைச் சங்கச் சிறுவர் ஒரு நாள் காலை தெருவில் கிடக்கும் ஆணி, எலும்பு, முள், கண்ணாடித் துண்டு முதலியவற்றைப் பொறுக்கு கிறார்கள். அவ் வழியில் வந்த ஒரு பெரியவர் அவர்களோடு பேசுகிறார்.]

பெரியவர்:—பிள்ளைகளே, ஆணி முதலிய வற்றை ஏன் பொறுக்குகிறீர்கள்?

சிறுவர்:—தாத்தா, இவை வழியில் கிடந்தால் நடப்பவர் கால்களில் தைக்கும் அல்லவா? சைக் கிள், மோட்டார் இவற்றின் சக்கரங்களில் தைத் தால் அவை கிழிந்து விடுமே!

பெரியவர்:— நீங்கள் நல்ல பிள்ளைகள். இவற் றைப் பொறுக்கி எறியும்படி உங்களை ஏவினவர் யாவர்?

---

* இவை மாதிரிக்காகத் தரப்பட்ட நாடகக் காட்சிகள். இவற்றை நன்றாக நடிக்கச் செய்க; இவற்றோடு வேறு பலவற் றையும் பாட புத்தகத்தில் வரும் கதைப் பகுதிகளையும் உரையாடல் (சம்பாஷணை) பகுதிகளையும் நடிக்கச் செய்க.

சிறுவர்:—தாத்தா, நாங்கள் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். அச் சங்கத்தின் வேலைகளில் இது ஒன்றாகும்.

பெரியவர்:—அப்படியா! நீங்கள் செய்யும் வேறு வேலைகள் எவை?

சிறுவர்:—தாத்தா, நாங்கள் வழி தவறும் பிள்ளைகளைப் பெற்றோரிடம் சேர்ப்போம்; கூட்டங்களில் அகப்பட்டுத் தவிக்கும் பிள்ளைகளை உரியவரிடம் சேர்ப்போம். நோயாளிகளுக்கும் காயப்பட்டவர்களுக்கும் எங்களால் ஆகும் உதவி செய்வோம்; தெருவைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் முறையை மக்களுக்கு எடுத்துக் காட்டுவோம்; சிறுவர்களுக்குள் ஒற்றுமை, இரக்கம், பிறர்க்கு உதவி செய்தல் முதலிய அருங்குணங்கள் உண்டாகப் பாடு படுவோம்; வழியில் காயப் பட்டோரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வோம்.

பெரியவர்:—குழந்தைகளே, உங்கள் சங்கம் மிகவும் நல்ல சங்கம். நீங்களும் நல்ல பிள்ளைகள். நீங்கள் சுகமாக வாழ்வீர்களாக!

2. சோம்பேறி மாணவன்

நேரம்—காலை 9 மணி.

இடம்—பூந்தோட்டம்.

பாத்திரங்கள்—சோம்பேறி சோமசுந்தரன், கண்ணன்.

[கண்ணன் பூக்களைப் பறிக்கிறான்].

சோமசுந்தரன்:—கண்ணா, இன்று வகுப்பில் பாராமல் கூற வேண்டும் பாடத்தைப் படித்தாயா ?

கண்ணன்:—நேற்று எனக்குத் தலைவலி அதிகமாக இருந்தது. அதனால் படிக்கவில்லை.

சோம:—கண்ணா, நானும் படிக்கவில்லை. ஆசிரியர் நம்மைத் தண்டிப்பார். ஆதலால், நாம் இருவரும் இன்று பள்ளிக்குப் போகாமல் நின்று விடுவோம். என்ன சொல்லுகிறாய் ?

கண்ணன்:—அப்பா, நல்ல யோசனை சொன்னாய் ! நான் அப்படிச் செய்யமாட்டேன். படியாமைக்குத் தக்க காரணம் கூறினால், ஆசிரியர் தண்டிக்கமாட்டார். நீ ஏன் படிக்கவில்லை ?

சோம:—நேற்று எங்கள் தெருவில் பாடிக் கொண்டு இருந்தனர். நான் இரவு படியாமல் நெடு

நேரம் அவர்களைச் சுற்றிக்கொண்டு இருந்தேன்; அதனால் காலையில் 8 மணிக்கே எழுந்தேன்; படிக்க முடியவில்லை.

கண்ணன்:—நீ செய்தது தவறுதானே?

சோம:—ஆம். அதில் என்ன ஐயம்?

கண்ணன்:—நான் சொல்வதைக் கேள். நீ என்னுடன் பள்ளிக்கூடம் வா. நாம் இருவரும் ஆசிரியரைத் தனியே காண்போம்; விஷயத்தை விவரமாகச் சொல்வோம்; நாளை முதல் தவறாமல் பாடங்களைப் படிப்பதாக உறுதி கூறுவோம். ஆசிரியர் நம்மை மன்னிப்பார். நமக்குத் தண்டனை இராது. இதற்காக நாம் பள்ளிக்குப் போகாமல் நின்றுவிடக் கூடாது.

சோம:—மெய்யாகவா?

கண்ணன்:—ஆம். நீ என் சொற்படி நட.

சோம:—சரி நீ வீடு செல். நான் புத்தகங்களை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்கு வருவேன்; பள்ளிக்குப் போகலாம்.

3. அழுக்கு மாணவன்

காலம்—காலை 9-30 மணி

இடம்—பள்ளிக்கூடம்

பாத்திரங்கள்—அழுக்கு மாணவன் அருணாசலமும், இராமனும், கோவிந்தனும்.

இராமன் :—அருணாசலம், இன்று உனது வேட்டி இவ்வளவு அழுக்காக இருக்கின்றதே, என்ன காரணம்?

அருணாசலம் :—இராமா, வழியில் கோபாலனுடன் விளையாடிவிட்டு வந்தேன். அவன் என்னைக் கீழே தள்ளிவிட்டான். அதனால்தான் வேட்டி அழுக்காய் விட்டது.

கோவிந்தன் :—நீ தலை சீவவில்லையோ?

அருணாசலம்:—நான் பள்ளிக்கு வரும்பொழுது என் தாயார் தலை நன்றாய்ச் சீவினார்கள். கோபாலனுடன் விளையாடியதால் தலை மயிர் கலைந்துவிட்டது.

இராமன்:—அருணாசலம், நீ நாள்தோறும் இந்தக் கதையையே சொல்லுகிறாய். நமது வகுப்பில் நீ ஒருவனே இவ்வளவு அசுத்தமாக வருகிறாய். உன்னால், நமது வகுப்பிற்கு வரும் 'சுகாதாரப் பரிசு' மூன்று மாதங்களாகத் தவறி வருகிறது.

உன்னுல் நாங்கள் எல்லோருமே அவமானம் அடைந்து வருகிறேம். நமது வகுப்புக்கே இது பெரிய அவமானம் அல்லவா? நமது ஆசிரியர் உன் செயலை எண்ணி எண்ணி வருந்துகிருர். எல்லாப் பிள்ளைகளும் உன்மீது கோபமாக இருக்கிருர்கள். நீ நாளை முதல் சுத்தமாக வராவிடில், நாங்கள் உன்னுடன் பேசவே மாட்டோம். இதைக் கடைசி எச்சரிக்கையாக வைத்துக் கொள்.

அருணுசலம்:—(கண்களில் நீர் ததும்ப) இராமா, நீ கூறியவை எல்லாம் உண்மையே. நான் நாளை முதல் சுத்தமாக வர முயற்சிப்பேன். நமது வகுப்பு அடுத்த மாதம் சுகாதாரப் பரிசைப் பெறும் என்பதை உறுதியாக நம்பு.

இராமன்:—(அருணுசலத்தைத் தழுவிக்கொண்டு) அருணுசலம், நீ இப்பொழுது சொன்னதைக் காப்பாற்று. உன்னுல் தான் பரிசு பெற வேண்டும்.

4. இரண்டு நண்பர்கள்

நேரம்—மாலை 3 மணி

இடம்—நடுக்காடு

பாத்திரங்கள்—கோபாலனும், கோவிந்தனும்

கோபாலன்:—கோவிந்தா, உனக்கு மரம் ஏறத் தெரியுமா?

கோவிந்தன் :—தெரியாது. எதற்காகக் கேட்கிருய் ?

கோபாலன்:—இந்தக் காட்டில் கரடிகள் பல உண்டு. கரடி வந்தால் நாம் மரம் ஏறிக் கொள்ளலாம். அதற்கு மரம் ஏறத்தெரியாது.

கோவிந்தன்:—அப்படியா! அப்பா, எனக்கு மரம் ஏறத் தெரியாதே, என்ன செய்வேன்!

கோபாலன்:— நீ பயப்படாதே. நான் உன்னே முதலில் மரத்தின்மீது ஏற்றிவிடுவேன்.

[கரடி ஓசை இடுகிறது - இவர்களே நோக்கி ஓடி வருகிறது.]

கோபாலன்:—ஆ! அதோ கரடி ஓடிவருகிறது. அட, சனியனே, அது நம்மை நோக்கி வருகிறதே !

(கோவிந்தன் பயத்தால் நடுங்குகிருன்)

(கரடி இருவரையும் நெருங்கிவிட்டது)

கோபாலன் :—கோவிந்தா, பயப்படாதே (என்று சொல்லிக்கொண்டே எதிரில் இருந்த மரத்தின்மீது ஏறிக்கொள்கிருன்.)

கோவிந்தன்:—கடவுளே நீயே துணை(என்று மண்ணில் படுத்து, மூச்சை அடக்கிக்கொண்டு பிணம்போலக் கிடக்கிறான்.)

[கரடி கோவிந்தனை முகர்ந்து பார்த்தது. மூச்சு இல்லை. அது அவனைப் பிணம் என்று எண்ணிப் போய்விட்டது. அது போன பிறகு கோபாலன் கீழ் இறங்கி வருகிறான்.]

கோபாலன்:—கோவிந்தா, எழுந்திரு. கரடி போய்விட்டது.

கோவிந்தன்:—(எழுந்து நின்று சுற்றிப் பார்த்து) அப்பா, பிழைத்தேன்.

கோபாலன்:—அது உன் காதில் என்ன சொல்லியது ?

கோபாலன்:—அப்பா, 'ஆபத்தில் கை விடும் நண்பரை நம்பாதே' என்று கரடி உபதேசம் செய்துவிட்டுப் போனது.

(கோபாலன் வெட்கத்தால் தலை குனிகிறான்.)

5. தசரதனும் விஸ்வாமித்திரனும்

நேரம் — காலை

இடம் — இராஜ சபை

பாத்திரங்கள் — தசரதன், வசிட்ட முனிவர், இராமன், இலக்குவன் அமைச்சர் முதலியோர்.

(விஸ்வாமித்திர முனிவர் வருகிறார்)

அரசன் :—(எழுந்து வணங்கி) முனிவர் பெருமானே, வருக! வருக! (எல்லோரும் எழுந்து முனிவரை வணங்குகிறார்கள்)

முனிவர் :—எல்லோர்க்கும் நன்மை உண்டாகுக !

அரசர் :—முனிவரே, தாங்கள் என்னிடம் வந்த காரியம் யாது?

முனிவர்:—அரசே, நான் காட்டில் ஒரு யாகம் செய்தேன். அங்குத் தாடகை என்னும் கொடிய அரக்கி ஒருத்தி இருக்கிறாள். அவளுக்குக் கரன் - தூஷணன் என்னும் பிள்ளைகள் இருவர் உண்டு. அம் மூவரும் அடிக்கடி வந்து எனது யாகத்தை அழித்து விடுகிறார்கள்.

தசரதன்:—அப்படியா! நான் வந்து அவர்களைக் கொல்வேன்.

முனிவர் :—அரசே, நாட்டை ஆள்வது உனது கடமை. ஆதலால், நீ வரவேண்டா. உன் பிள்ளைகள் நால்வரில் மூத்தவனாகிய இராமனை அனுப்பு; போதும்.

தசரதன் :—(முகம் சுளித்து) பெரியவரே, நான் அவனை என் உயிராக எண்ணி இருக்கிறேன். நான் அவனை எப்படிப் பிரிவேன்! மேலும் அவன் சிறியவன்; அரக்கரோ பெரியவர்-கொடியவர். அவர்களைக் கொல்ல அவனால் முடியுமா?

முனிவர்:—(கடுங்கோபம் கொண்டு) தசரதா, இராமனை என்னுடன் அனுப்புகிறாயா? இல்லையா?

வசிட்டர் :—(தசரதனுக்கு, அனுப்புமாறு சைகை செய்து) அரசே, இராமனை முனிவருடன் அனுப்புவதே நல்லது. அவரால் அவனுக்குப் பல நன்மைகள் உண்டாகும். உடனே அனுப்பு.

இலக்குவன்:—அப்பா, நானும் அண்ணனுடன் போவேன்.

தசரதன் :—(இராம - இலக்குவர் கைகளைப் பிடித்து முனிவர் கைகளில் வைத்து) முனிவர் பெருமானே, இவர்கள் உங்கள் அடைக்கலம். இவர்களைக் காப்பது உங்கள் கடமை.

முனிவர்:—(இருவரையும் இரண்டு கைகளில் பிடித்துக் கொண்டு) தசரத, நீ இவர்களைப் பற்றிக்-

கவலைப் படாதே. இவர்கள் இப்பொழுது என் பிள்ளைகள், நாங்கள் போய் வருகிறோம்.

மூவரும் போகிருர்கள்-(தசரதன் ஏக்கத்தோடு பிள்ளைகளைப் பார்க்கிருன்.)

6. இராமனும் இலக்குவனும்

நேரம் — காலை

இடம் — அரண்மனைக்கு வெளியே

பாத்திரங்கள் — இராமனும் இலக்குவனும்

[இலக்குவன் வில்லில் அம்பு பூட்டியவனுய்-மிகவும் கோபம் கொண்டவனுய் நிற்கிருன்.]

இலக்குவன் :—(தனக்குள்) என்ன அநியாயம்! நேற்று வரை நான் தெய்வமாக எண்ணி இருந்த கைகேயி, கொடிய பேயாக மாறி விட்டாளே! அடடா! என்ன காலக் கேடு! என் உயிர் போன்ற அண்ணனைக் காட்டிற்கு அனுப்பத் துணிந்தாளே! தன் மகன் பரதனுக்குப் பட்டம் வேண்டுமாம். என்ன மோசமான எண்ணம்! மூத்தவன் இருக்க இளையவன் பட்டம் பெறுதல் முறையாகுமா? இந்த முறையற்ற செயலைச் செய்ய அவள் எப்படித் துணிந்தாள். அவளைக் கொன்ருல் என்ன?

இராமன்:—(வந்து, இலக்குவனைப் பார்த்து) தம்பீ, உன் முகம் மாறி இருக்கிறதே, என்ன காரணம்?

இலக்குவன்:—அண்ணு, உங்களேக் காட்டுக்கு அனுப்பத் துணிந்த கைகேயியைக் கொல்லப் போகிறேன்.

இராமன்,— தம்பீ, நீதான் இப்படிப் பேசுகிருயா? கைகேயி நம் தாயார் அல்லவா? அவர் பெற்ற பரதன் நமது தம்பி அல்லவா? நான் இந்த நாட்டை ஆண்டால் என்ன? நீ ஆண்டால் என்ன? பரதன் ஆண்டால் என்ன? நான் காட்டிற்குப் போக வேண்டும் என்பது அவரது ஆசை. காட்டில் முனிவர் பலரைச் சந்திக்கலாம்; நல்ல உபதேசங்களேப் பெறலாம்; பல சரித்திரங்களேப் படிக்கலாம்; தவசிகளுடன் சுகமாகக் காலம் கழிக்கலாம். இவற்றை நீ எண்ணிப் பாராமல், நமது தாயைக் கொல்லத் துணிந்தாயே! அவசரப் படலாமா? தாயைக் கொன்று நாம் இந்த நாட்டை ஆளலாமா? அதனுல் வரும் நன்மை என்ன? தாயைக் கொன்ற பழிதானே நம்மை வந்து அடையும்.

இலக்குவன் :—(இராமனே வணங்கி) அண்ணு, என்னே மன்னிக்கவும். நானும் உங்களுடன் காட்டிற்கு வருகிறேன்.

(இருவரும் போகிருர்கள்.)

THE MODEL PUBLICATIONS,

THYAGARAYANAGAR, MADRAS.

OUR PUBLICATIONS

COMMONWEALTH ENGLISH READERS.

by

W. TURNER, M. A., (Ox, En.)

&

M. ATHUR RAHMAN, B. A.,

PRIMER	0	7	0
BOOK I	0	7	0
BOOK II	0	8	0
BOOK III	0	10	0
BOOK IV	0	12	0

புதுமணம் தமிழ் வாசகம்

By K. P. SANTOSH, B.A., L.T.,

Headmaster, Voorhis College High School, Vellore.

முதற் புத்தகம் (முதல் வகுப்புக்குரியது)	0	3	0
இரண்டாம் புத்தகம் (2-ம் வகுப்புக்குரியது)	0	4	0
மூன்றும் புத்தகம் (3-ம் வகுப்புக்குரியது)	0	5	0
நான்காம் புத்தகம் (4-ம் வகுப்புக்குரியது)	0	6	0
ஐந்தாம் புத்தகம் (5-ம் வகுப்புக்குரியது)	0	7	0

இலக்கணமும் கட்டுரையும்

by

M. RAJAMANIKKAM, B. O. L.

முதற் புத்தகம் (3-ம் வகுப்புக்கு)	0	4	0
இரண்டாம் புத்தகம் (4-ம் வகுப்புக்கு)	0	5	0
மூன்றும் புத்தகம் (5-ம் வகுப்புக்கு)	0	6	0

இளங்கோ இலக்கணம்

By M. RAJAMANIKKAM, B. O. L.

முதல் மூன்று பாரங்கட்கு	0	10	0